

தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில், தருமபுரி மேற்கு ஒன்றியம் – இலக்கியம்பட்டியில் கலைஞர் நூலகத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்தார். அதுபோது வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி, மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தாமரைச்செல்வன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், பிரகாஷ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர். தருண், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன், ஆர்.சிவகுரு, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், எம்.ஜி. சேகர்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர்.அசோக்குமார்.பி.என்சி.மகேஷ்குமார், கலைச்செல்வன், செல்வராஜ், இராஜகோபால், கார்த்திக், முத்தமிழன், ஹரிபிரசாத்,கோடீஸ்வரன், தங்கசெழியன், நாசர் உள்பட தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, ஒன்றிய நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பொதுமக்கள் குறைகளைத் தெரிவிக்க

# “ஊராட்சி மணி” குறை தீர்க்கும் மையம் திறப்பு!

## அமைச்சர் ஐ.பெரியசாமி தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 29 - ஊரகப் பகுதிகளில் ஏற்படும் குறைகளைக் களையும் பொருட்டு “ஊராட்சி மணி” என்கிற அமைப்பு ஊரக வளர்ச்சி ஊராட்சித் துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், பொது மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஊராட்சிகளைத் தொடர்பு கொள்ளும் வகையில் ஒரு இலவச குறை தீர்வு அழைப்புஎண்“155340” பிரத்யேகமாக மாநில அளவில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இம்முறை மூலம் பொதுமக்கள் மிக எளிமையாக தொலைபேசி (155340), வலைதளம் (Ooratchimani.in) மூலம் எளிதாக அணுக முடியும்.

மேலும் பெறப்படும் புகார்களின் தன்மைக் கேற்ப அலுவலகரீதியிலான கால தாமதம் தவிர்க்கப்பட்டு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அப்புகார் மீது எளிய முறையில் உடனடித் தீர்வு காணப்படும்.

மேலும் ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி பணியாளர்கள் ஆகியோருக்கு ஏற்படும் குறைகளையும், சந்தேகங்களையும் இந்த ஊராட்சி மணி மூலம் அணுகி பதில்பெறும் வகையில் இச்சேவை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி நேற்று முன்தினம் (27.09.2023) காலை 11.00 மணி அளவில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முதன்மை செயலாளர், முனைவர் ப. செந்தில் குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பா.பொன்னையா, கூடுதல் இயக்குநர் (பொது), எம்.எஸ்.பிரசாந்த் மற்றும் இதர அலுவலர்கள் பங்கேற்றனர்.

## ஒன்றிய அரசை விமர்சிக்கும் எதிர்க்கட்சியினரின்

# சமூக ஊடகப் பதிவுகள் முடக்கப்படுகிறது!

## திரிணாமுல் காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

கொல்கத்தா, செப். 29 - நாடாளுமன்ற உறுப்பினரும், திரிணாமுல் காங்கிரஸ் செய்தி தொடர்பாளருமான சாக்கேத் கோகலே வெளியிட்டுள்ள சமூக வலை தள பதிவில், மணிப்பூர் கலவரம் குறித்து பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டுமென வலியுறுத்தி கடந்த 5ம் தேதி ட்விட்டரில் பதிவிட்டிருந்தாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் எந்த முன்னறிவிப்புமின்றி, மோடி அரசின் உத்தரவின்படி, தனது ட்விட்டர் பதிவு முடக்கப் பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ட்விட்டருக்கு நோட்டீஸ் அனுப்பியதையடுத்து தமது பதிவு மீண்டும் வெளியிடப்பட்டதாகவும், பின்னர் அது குறித்து மின்னஞ்சல் தனக்கு அனுப்பப்பட்டதாகவும் சாக்கேத் கோகலே கூறியுள்ளார்.

கடந்த 2 மாதங்களாக ட்விட்டர் பயனாளர்கள் பலருக்கு இதுபோல நடந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து ஒன்றிய தகவல் தொழில்நுட்ப இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகரிடம் தாம் விளக்கம் கேட்டதாகவும், அப்போது பிரதமர் மீது எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குற்றச்சாட்டு தெரிவிக்க இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளதா என கேள்வியெழுப்பியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து பதிலளிக்கவில்லையெனில், அவருக்கு எதிராகவும், அவரது அமைச்சகத்துக்கு எதிராகவும் தாம் நீதிமன்றம் செல்ல நேரிடும் என எச்சரித்ததாகவும் சாக்கேத் கோகலே குறிப்பிட்டுள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# கடலூரில் பொது மருத்துவம் - கண் சிகிச்சை முகாம்!

## கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கடலூர், செப். 29

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், மாவட்டச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப் படி, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொள்ளும் பொது மருத்துவம் மற்றும் கண் மருத்துவ முகாம் கடலூர் முதுநகரில் நடைபெற்றது.

முகாமிற்கு கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி தொடங்கி வைத்து சிறப்பித்தார். டாக்டர் பிரவின் அய்யப்பன் முன்னிலை வகித்தார். மாநகர இளைஞர் அணி துணை துணை அமைப்பாளர் கவுன்சிலர் சரத் தினகரன் வரவேற்றார்.

முகாமில் பொது மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, தோல், எலும்பு, கண்புரை, கண் தொடர்பான மருத்துவம், குழந்தைகளுக்கான மருத்துவம், இ.சி.ஜி, ரத்த பரிசோதனை குறித்த பல்வேறு சிகிச்சைகள் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டது.

இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச சிகிச்சை பெற்றுக் கொண்டனர்.

மேலும் ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

இதில் முன்னாள் மாவட்டப் பொருளாளர் வி.எஸ். எல்.குணசேகரன் கவுன்சிலர்கள் கீதா குணசேகரன், பிரகாஷ், தமிழரசன், சுமதி ரங்கநாதன், மகேஸ்வரி விஜயகுமார், பாருக் அலி, கர்ணன், கீர்த்தனா ஆறுமுகம், ராதிகா பிரேம்குமார், வேலன் ஸ்டீல்ஸ் வேல்முருகன், கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், தொழிலதிபர் கே.ஜி.எஸ்.தினகரன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ராதாகிருஷ்ணன், சுதாகர், ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமாரசாமி, துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், சன் பிரைட் பிரகாஷ்,இளைஞர் அணி பிரகாஷ், மனோஜ், சூர்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொள்ளும் பொது மருத்துவம் மற்றும் கண் மருத்துவ முகாம் கடலூர் முதுநகரில் நடைபெற்றது. முகாமிற்கு கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி தொடங்கி வைத்து சிறப்பித்தார். டாக்டர் பிரவின் அய்யப்பன் முன்னிலை வகித்தார். மாநகர இளைஞர் அணி துணை துணை அமைப்பாளர் கவுன்சிலர் சரத் தினகரன் வரவேற்றார். முகாமில் பொது மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, தோல், எலும்பு, கண்புரை, கண் தொடர்பான மருத்துவம், குழந்தைகளுக்கான மருத்துவம், இ.சி.ஜி, ரத்த பரிசோதனை குறித்த பல்வேறு சிகிச்சைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச சிகிச்சை பெற்றுக் கொண்டனர். மேலும் ஒரு சிலருக்கு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.


